SW4-1

53 44884
04/08/2023

தலைமைச் செயலகம்
- 4 AUG 2023
சென்னை-600 009
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

சுருக்கம்

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2023-2024ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டது - துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவுத் திட்டம்), வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) ஆகியோருக்கான பணிகளும் பொறுப்புகளும் நிர்ணயம் செய்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (நிலை) எண்.102

நாள்:03.08.2023.
சோபகிருது, ஆடி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண் 127 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (E-5) துறை, நாள் 21.9.2015.
2. அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந.4-1)துறை, நாள் 07.06.2023.
3. சமூக நல இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 3652/NMP.2./2023 நாள் 31.5.2023.
4. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் அ.சா.எண்.5201103/ சந.4-1/2023-1, நாள் 23.07.2023.

-----

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023-2024-ஆம் நிதியாண்டில் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு விரிவுபடுத்தி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (சத்துணவுத் திட்டம்) மட்டுமே கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆகியோருக்கு அவ்வரசாணையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தினந்தோறும் கண்காணிக்கும்

பொருட்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (சத்துணவுத் திட்டம்) மேற்குறிப்பிட்ட அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பணிப்பொறுப்புகளுடன் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணிகளையும் பொறுப்புகளையும் சேர்த்து அரசாணைக்கு உரிய திருத்தம் வெளியிடுமாறும் மேலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆகியோருக்கு ஏற்கனவே உள்ள பணிப்பொறுப்புகளுடன் சேர்த்து கூடுதலாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடர்பான கடமைகளையும் பொறுப்புகளையும் நிர்ணயம் செய்யுமாறும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

3. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து, முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தினந்தோறும் கண்காணிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆகியோருக்கு ஏற்கனவே உள்ள பணிப்பொறுப்புகளுடன் சேர்த்து முறையே இணைப்பு I மற்றும் II-ல் உள்ளவாறு கடமைகளையும் பொறுப்புகளையும் கூடுதலாக நிர்ணயம் செய்ய முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தினந்தோறும் கண்காணிக்கும் பொருட்டு, துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (சத்துணவுத் திட்டம்) கடமைகளையும் பொறுப்புகளையும் கூடுதலாக நிர்ணயம் செய்ய ஏதுவாக அரசாணை (நிலை) எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ5) துறை, நாள் 21.09.2015-க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:-

<u>திருத்தம்</u>

அரசாணை (நிலை) எண். 127, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ5) துறை, நாள் 21.09.2015-ன் இணைப்பு III - தலைப்பு "A. Head Quarters Dy.BDOs.", குறுந்தலைப்பு "(ii) Dy.BDO (Nutritious Meal Programme)"-ன் கீழ் உள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளுடன் இவ்வரசாணையின் இணைப்பு III-ல் உள்ள கடமைகளும் பொறுப்புகளும் கூடுதலாக சேர்க்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை-9.

சமூக நல இயக்குநர், சைதாப்பேட்டை, சென்னை-15.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை-9.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1 / இ6 / மஅதி.3) துறை, சென்னை-9.

அரசாணை (நிலை) எண் 127, ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் (பஅ.5) துறை, நாள் 21.9.2015.

இருப்புகோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

3/8/2023

## இணைப்பு - I

(அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5) துறை, நாள் 03.08.2023)

### மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) கடமைகளும் பொறுப்புகளும்

மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவார்.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணியாளர்களின் பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட பணி நேரம் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை.
- காலை உணவுத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் உள்ள அனைத்து பள்ளி / மையங்களிலும் மாணவ / மாணவியருக்கு காலை 8.15 மணி முதல் 8.50 மணிக்குள் உணவு வழங்கப்படுவதை சம்மந்தப்பட்ட பணியாளர்கள் மூலம் கண்காணித்தல் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- பள்ளி வளாகத்தில் காலை உணவு தயாரித்தல் மற்றும் மாணவ / மாணவியருக்கு பரிமாறுதல் பணிகளிலும், மதிய உணவு தயாரித்து வழங்கும் பணிகளிலும் எவ்வித தொய்வும் ஏற்படா வண்ணமும், பணியாளர்களுக்கிடையே எவ்வித பிரச்சனைகள் எழாத வகையிலும் சத்துணவு மைய பணியாளர்கள் மற்றும் காலை உணவுத் திட்ட பொறுப்பாளர்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்பினை உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டத்திற்கு போதுமான அளவு மூலப்பொருட்கள் கையிருப்பில் உள்ளதை அவ்வப்போது வட்டார அலுவலர்களிடம் ஆய்வு செய்து உறுதி செய்தல்.
- உணவுப் பொருட்கள் தேவைப் பட்டியல் விவரங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து உரிய நேரத்தில் பெறப்படுவதை உறுதி செய்தல்.
- உணவுப் பொருட்கள் தேவைப் பட்டியல்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து பெற்று உரிய பரிசீலனைக்கு பின்னர், மாவட்ட அளவில் தொகுத்து சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர்களிடம் உரிய நேரத்தில் சமர்ப்பித்தல்.
- மையத்தில் காலை உணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் காய்கறிகள் மற்றும் உணவுப்பொருட்கள் உரிய முறையில் கொள்முதல் செய்யப்படுவதையும், தரமானதாக இருப்பதையும் கண்காணித்தல்.
- அந்தந்த நாளுக்கென நிர்ணயிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள் உரிய அளவுகளில் மாணவ / மாணவியருக்கு தயார் செய்து வழங்கப்படுவதை கண்காணித்தல்.

- சமைக்கப்பட்ட உணவு மாதிரிகளை தேவைப்படும் போது ஆய்விற்கு உட்படுத்திட ஏதுவாக சத்துணவு திட்டத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் மாவட்ட அளவில் அனைத்து மையங்களிலும் கடைபிடிக்கப்படுவதை கண்காணித்தல்.
- காலை உணவுத் திட்டம் செயல்படுத்தும் மாவட்ட அளவில் திட்ட செயலாக்கத் துறை / முகமை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக வட்டார அளவில் பணிபுரியும் அனைத்து துறை சார்ந்த பணியாளர்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தி திட்டம் செவ்வனே செயல்படுவதை உறுதி செய்தல்.
- அனைத்து வட்டாரங்களிலும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் சுய உதவிக்குழு / பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு சார்ந்த பொறுப்பாளர்கள் / சமையலர்கள் / உதவியாளர்களுக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- மாவட்ட அளவில் உள்ள அனைத்து மையங்களில் காலை உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் தொடர்பான பணிகளை கண்காணித்தல்.
- காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான பொருட்களை தனித்தனியாகவும், முறையாகவும் பராமரிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான பதிவேடுகள் சம்பந்தப்பட்ட பள்ளிகள் / மையங்களில் முறையாக பராமரிக்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான மைய கணக்குகள் ஆய்வு மற்றும் தணிக்கைக்கு உரிய முன்னேற்பாடுகள் செய்தல்.
- பள்ளி / வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக வட்டார அளவில் நடத்தப்படும் கூட்டங்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் கலந்து கொள்ளுதல்.
- மாவட்ட மற்றும் வட்டார அளவில் காலை உணவுத் திட்டம் அனைத்து அரசு பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுவதையும், மாணவ / மாணவியரின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பயனாளிகள் தொடர்பான விவரங்களையும் அவ்வப்போது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தெரிவித்து உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடத்தப்படும் கூட்டங்களில் இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கம்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) ஆகியோருடன் கலந்து கொள்ளுதல்.

- காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள செயலியில் (CMBF App) திட்ட செயலாக்கம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக சமூக தணிக்கைக்கு உட்படுத்துதல் தொடர்பாக வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றுதல்.
- திட்ட அலுவலரால் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்) காலை உணவுத் திட்டம் தொடர்பாக நடத்தப் பெறும் அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் உதவி புரிதல்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடர்பாக அவ்வப்போது வழங்கப்படும் நெறிமுறைகள், வழிகாட்டுதல்கள் முறையாக கடைபிடிக்கப்பட வேண்டும். மேலும், திட்ட செயலாக்க முகமை துறை தலைமை அலுவலர்களால் நிர்ணயிக்கப்படும் பணிகள் எவ்வித தொய்வுமின்றி செயல்படுத்தப்பட்டு அனைத்து நிலைகளிலும் திட்டத்தின் நோக்கம் மாவட்டத்தில் செம்மையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்திடல் வேண்டும்.

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - II

(அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5) துறை, நாள் 03.08.2023)

### வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கடமைகளும் பொறுப்புகளும்

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவார்.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணியாளர்களின் பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட பணி நேரம் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை.
- காலை உணவுத் திட்டத்தின் கீழ் வட்டார அளவில் உள்ள அனைத்து பள்ளி / மையங்களிலும் மாணவ / மாணவியருக்கு குறிப்பிட்ட நேரத்தில் காலை உணவு வழங்கப்படுவதை சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மூலம் கண்காணித்து உறுதி செய்தல்.
- சமைக்கப்பட்ட உணவு மாதிரிகளை தேவைப்படும் போது ஆய்விற்கு உட்படுத்திட ஏதுவாக சத்துணவு திட்டத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் வட்டார அளவில் அனைத்து மையங்களிலும் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- அந்தந்த நாளுக்கென நிர்ணயிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள் உரிய அளவுகளில் மாணவ / மாணவியருக்கு தயார் செய்து வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- உணவுப் பொருட்கள் தேவைப் பட்டியல் பள்ளிகள் வாரியாக விவரங்களை வட்டார அளவில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து பெற்று உரிய பரிசீலனைக்குப் பின்னர் வட்டார அளவில் தொகுத்து மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுத் திட்டம்) அவர்களிடம் உரிய நேரத்தில் சமர்ப்பித்தல்.
- மையத்தில் காலை உணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் காய்கறிகள் மற்றும் உணவுப்பொருட்கள் உரிய முறையில் கொள்முதல் செய்யப்படுவதையும், தரமானதாக இருப்பதையும் கண்காணித்தல்.
- காலை உணவுத் திட்டம் செயல்படுத்தும் வட்டார அளவில் திட்ட செயலாக்கத் துறை / முகமை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிதல்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் சுய உதவிக்குழு / பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு சார்ந்த பொறுப்பாளர்கள் / சமையலர்கள் / உதவியாளர்களுக்கு தேவையான ஒத்துழைப்பினை உறுதி செய்தல்.

- வட்டார அளவில் உள்ள மையங்களில் காலை உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் தொடர்பான பணிகளை முறையாக கண்காணித்தல்
- பள்ளி வளாகத்தில் காலை உணவு தயாரித்தல் மற்றும் மாணவ / மாணவியருக்கு பரிமாறுதல் பணிகளிலும், மதிய உணவு தயாரித்து வழங்கும் பணிகளிலும் எவ்வித தொய்வும் ஏற்படாவண்ணமும், பணியாளர்களுக்கிடையே எவ்வித பிரச்சனைகள் எழாத வகையிலும் சத்துணவு மைய பணியாளர்கள் மற்றும் காலை உணவுத் திட்ட பொறுப்பாளர்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்பினை உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான பொருட்களை தனித்தனியாகவும், முறையாகவும் பராமரிக்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டத்திற்கு போதுமான அளவு மூலப்பொருட்கள் கையிருப்பில் உள்ளதை அவ்வப்போது கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான பதிவேடுகள் சம்பந்தப்பட்ட பள்ளிகள் / மையங்களில் முறையாக பராமரிக்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான மைய கணக்குகள் ஆய்வு மற்றும் தணிக்கைக்கு உரிய முன்னேற்பாடுகள் செய்தல்.
- பள்ளி / வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான வட்டார அளவிலான கூட்டங்களை நடத்துதல்.
- வட்டார அளவில் காலை உணவுத் திட்டம் அனைத்து அரசு பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுவதையும், மாணவ / மாணவியரின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பயனாளிகள் தொடர்பான விவரங்களையும் அவ்வப்போது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தெரிவித்து உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்படும் இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கம்), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) வட்டார வழங்கல் அலுவலர் போன்ற துறை அலுவலர்களுக்கான கூட்டங்களில் கலந்து கொண்டு வட்டார அளவில் திட்டத்தின் செம்மையான செயல்பாடுகள் குறித்து உறுதி செய்து உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக சமூக தணிக்கைக்கு உட்படுத்துதல் தொடர்பாக வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றி தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

- காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள செயலியில் (CMBF App) திட்ட செயலாக்கம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- திட்ட அலுவலரால் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்) காலை உணவுத் திட்டம் தொடர்பாக நடத்தப் பெறும் அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் உதவி புரிதல்.
- வட்டார அளவிலான ஒருங்கிணைப்பு மூலம் அனைத்து கிராம ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கிராம அளவிலான குழுவுடன் இணைந்து காலை உணவுத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்த ஒருங்கிணைத்தல்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடர்பாக அவ்வப்போது வழங்கப்படும் நெறிமுறைகள், வழிகாட்டுதல்கள் முறையாக கடைபிடிக்கப்பட வேண்டும். மேலும், திட்ட செயலாக்க முகமை துறை தலைமை அலுவலர்களால் நிர்ணயிக்கப்படும் பணிகள் எவ்வித தொய்வுமின்றி செயல்படுத்தப்பட்டு அனைத்து நிலைகளிலும் திட்டத்தின் நோக்கம் மாவட்டத்தில் செம்மையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்திடல் வேண்டும்.

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

இரா.செல்வி (கையொப்பம்)
பிரிவு அலுவலர்.
3/8/2023

ஊ.வ(ம).ஊ(பஅ5)துறை

## இணைப்பு - III

(அரசாணை (நிலை) எண்.102, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5) துறை, நாள் 03.08.2023)

### துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு திட்டம்) கடமைகளும் பொறுப்புகளும்

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிவார்.

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டப் பணியாளர்களின் பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட பணி நேரம் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் உள்ள அனைத்து பள்ளி / மையங்களிலும் காலை உணவு மாணவ / மாணவியருக்கு குறிப்பிட்ட நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- உணவு சமைக்கப்படும் இடம் மற்றும் வளாகம் தூய்மையாக பராமரிக்கப்படுவதை கண்காணித்தல்.
- மையத்தில் பயன்படுத்தப்படும் காய்கறிகள் மற்றும் உணவுப்பொருட்கள் தரமானதாக இருப்பதை கண்காணித்து உறுதி செய்தல்.
- அந்தந்த நாளுக்கென நிர்ணயிக்கப்பட்ட சிற்றுண்டி வகைகள் உரிய அளவுகளில் மாணவ / மாணவியருக்கு தயார் செய்து வழங்கப்படுவதை கண்காணித்தல்.
- சமைக்கப்பட்ட உணவு மாதிரிகளை தேவைப்படும் போது ஆய்விற்கு உட்படுத்திட ஏதுவாக சத்துணவு திட்டத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்தல்.
- சமையலுக்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் மற்றும் மாணவ / மாணவியருக்கு உணவு உண்ண வழங்கப்படும் தட்டு மற்றும் டம்ளர் ஆகியவை நன்கு கழுவப்பட்டு சுத்தமான முறையில் பராமரிக்கப்படுவதை கண்காணித்தல்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் சுய உதவிக்குழு / பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு சார்ந்த பொறுப்பாளர்கள் / சமையலர்கள் / உதவியாளர்களுக்கு தேவையான ஒத்துழைப்பினை நல்குதல்.
- காலை உணவு தயாரித்தல் மற்றும் பரிமாறுதல் தொடர்பான பணிகளை கண்காணித்தல்
- பள்ளி வளாகத்தில் காலை உணவு தயாரித்தல் மற்றும் மாணவ / மாணவியருக்கு பரிமாறுதல் பணிகளிலும், மதிய உணவு தயாரித்து

வழங்கும் பணிகளிலும் எவ்வித தொய்வும் ஏற்படாவண்ணமும், பணியாளர்களுக்கிடையே எவ்வித பிரச்சனைகள் எழாத வகையிலும் சத்துணவு மைய பணியாளர்கள் மற்றும் காலை உணவுத் திட்ட பொறுப்பாளர்களுக்கிடையே உரிய ஒருங்கிணைப்பினை உறுதி செய்தல்.

- காலை உணவுத் திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றுக்கான பொருட்களை தனித்தனியாகவும், முறையாகவும் பராமரிக்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டத்திற்கு போதுமான அளவு மூலப்பொருட்கள் கையிருப்பில் உள்ளதை அவ்வப்போது கண்காணித்து உறுதி செய்தல்.
- உணவுப் பொருட்கள் தேவைப் பட்டியல் விவரங்களை காலை உணவுத் திட்ட பொறுப்பாளர்களிடமிருந்து பெற்று உரிய பரிசீலனை செய்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் உரிய நேரத்தில் சமர்ப்பித்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான பதிவேடுகள் சம்பந்தப்பட்ட பள்ளிகள் / மையங்களில் முறையாக பராமரிக்கப்படுவதை கண்காணித்து உறுதி செய்தல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பான மைய கணக்குகள் ஆய்வு மற்றும் தணிக்கைக்கு உரிய முன்னேற்பாடுகள் செய்தல்.
- பள்ளி / வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக வட்டார அளவில் நடத்தப்படும் கூட்டங்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் கலந்து கொள்ளுதல்.
- வட்டார அளவில் காலை உணவுத் திட்டம் அனைத்து அரசு பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுவதையும், மாணவ / மாணவியரின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பணியாளர்கள் தொடர்பான விவரங்களையும் அவ்வப்போது வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)க்கு தெரிவித்து உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சமூக தணிக்கைக்கு உட்படுத்துதல் தொடர்பாக வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றுதல்.
- திட்ட அலுவலரால் (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம்) காலை உணவுத் திட்டம் தொடர்பாக நடத்தப் பெறும் அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)-க்கு உதவி புரிதல்.
- காலை உணவுத் திட்டம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள செயலியில் (CMBF App) திட்ட செயலாக்கம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்தல்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடர்பாக அவ்வப்போது வழங்கப்படும் நெறிமுறைகள், வழிகாட்டுதல்கள் முறையாக கடைபிடிக்கப்பட

வேண்டும், மேலும், திட்ட செயலாக்க முகமை துறை தலைமை அலுவலர்களால் நிர்ணயிக்கப்படும் பணிகள் எவ்வித தொய்வுமின்றி செயல்படுத்தப்பட்டு அனைத்து நிலைகளிலும் திட்டத்தின் நோக்கம் மாவட்டத்தில் செம்மையாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்திடல் வேண்டும்.

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

3/8/2023